RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

OPEN ACCESS

DOI: 10.34256/irjt224s-22237

# கலித்தொகையில் வழிபாட்டு மரபுகள்

**வ. அருண் முருகன்** [அ, *]

[அ] தமிழ்த்துறை, அரசு ஆடவர் கலைக் கல்லூரி, கிருஷ்ணகிரி-635001, தமிழ்நாடு, இந்தியா

# Liturgical Traditions in Kalithogai

**V. Arun Murugan** [a, *]

[a] Department of Tamil, Government. Arts College for Men, Krishnagiri-635001, Tamil Nadu, India

* Corresponding Author: avarunmurugan1995@gmail.com

Received: 26.09.2022
Revised: 06-11-2022
Accepted: 11-11-2022
Published: 01-12-2022

Check for updates

## ABSTRACT

All human beings around the world live by accepting some philosophical theory. Tamil people are also following some kind of philosophical theory in their life since ancient period. Thus Tholkkapiyar in Tholkaapiyam explains the five types of landforms and the gods worshiped there. The first volume of the book Primitive Culture published by the English anthropologist Edward Burnett Tyler (1831-1917) in the 19th century, explains about the primitive culture in first volume and about primitive religion in second volume. This article analyses the songs sung by five poets, Perungadungo who sang paalaikali, Kapilan who sang kurinchikali, Marutanilanaganar who sang maruthakalip, and Nallundhuvanar who sang neithalkalip. It also explains about the gods and worship traditions of the people living in the five landforms.

**Keywords:** Philosophy, Ancient Religion, Culture, Ancient Culture, Primitive Religion

## முன்னுரை

பழங்கால மனிதன் இயற்கையோடு இனைந்தே தம் வாழ்கையை மேற்கொண்டான். இயற்கையோடு இனைந்து வாழ்கின்ற போது பல்வேறு இயற்கைச் சீற்றங்கள் ஏற்பட்டு பாதிப்புக்கு உள்ளாகினான். அப்பாதிப்பிலிருந்து தவிர்க்க இயற்க்கை வழிபாட்டை முன்னெடுத்தனர் அதுவே பரிணாம வளர்ச்சி பெற்று உருவ வழிபாடு, குலதெய்வ வழிபாடு, சிறுதெய்வ வழிபாடு, பெருந்தெய்வ வழிபாடு எனப் பலப்பிரிவுகளாக உருவெடுத்தன. இப்படியான பல்வேறு வழிபாட்டு மரபுகளை உள்ளடக்கியது தான் தமிழ்ச் சமூகமும் (Sakthivel, 2014). இத்தமிழ்ச் சமூகத்தில் இருந்துதான் சங்க இலக்கியங்களான எட்டுத்தொகையும், பத்துப்பாட்டும் தோன்றியுள்ளன. இவ்வெட்டுத்தொகை நூல்களுள் ஒன்றுதான் அகஇலக்கியமான கலித்தொகையாகும். இக்கலித்தொகையில் உள்ள வழிபாட்டு மரபுகளை ஆய்ந்து விளக்குவதாக இக்கட்டுரை அமைகிறது.

## வழிபாடு - வரையறை

‘வழிபடு’ என்பதிலிருந்து பிறந்தது வழிபாடு என்னும் சொல், வழிபடு என்பதற்கு வணங்குதல், வழியில் செல்லுதல், பின்பற்றுதல், நெறிப்படுத்துதல், பூசனை முறை என்று அகராதிகள் பொருள் தருகின்றன. தெய்வங்களை மகிழ்விப்பதற்காக மேற்கொள்ளப்படும் செயல்பாடுகளும் பூசனைமுறைகளுமே வழிபாடு என்றும், இறைவனுடன் இரண்டறக் கலப்பதே வழிபாடு என்றும் வழிபாடு குறித்துப் பல்வேறு விளக்கங்கள் முன்வைக்கப்படுகின்றன. மேற்கண்ட கருத்துகளின் வழி

உயர் நிலையான ஒன்றை உள்ளத்தால் நெருங்கவும் உணர முற்படவும் மேற்கொள்ளப்படும் வழிமுறைகளே வழிபாடு எனப்படுகிறது.

## மரபுகள்

மரபு என்றால் முறைமை, பழமை, பாரம்பரியம், வழிபாடு, நல்லொழுக்கம் என்று பல்வேறு பொருள்கள் உண்டு. மரபியல் என்பது முன்னோர் வழங்கிய சொல் வழக்கை கூறும் இலக்கணப்பகுதியாகும். மரபு என்றால் முன்னோர்கள் தேடிப் பயன்படுத்திய அரும்பொருட்களைப் பின்னையோர் போற்றிப் பெருமிதம் கொள்வதாகும் என்பதை நன்னூலார்.

“முன்னோர் மொழிப் பொருயேன்றி யவர்மொழியும்

பொன்னே போல் போற்றுவம்” (Thirunenasambanthar, 2019)

என்று வழி நூலுக்கும், சார்பு நூலுக்கும் சிறப்பு விதி கூறுகின்ற விடத்துக் கூறுவார்.

## சமயத்தின் தோற்றம்

தொன்மைச் சமயம் (Primitive Religion) தோன்றிய முறையை விளக்க முற்பட்ட முதல் மானிடவியல் கோட்பாடே ஆவிவழிபாடு (animism) ஆகும். இக்கோட்பாட்டை 19-நூற்றாண்டைச் சேர்ந்த ஆங்கிலேய மானிடவியலறிஞர் எட்வர்டு பார்னட் டைலர் (1832-1917) என்பவர் வகுத்தார். இவர் 1817-ஆம் ஆண்டு இரண்டு தொகுதிகளாக வெளியிட்ட தொன்மைப் பண்பாடு (Primitive culture) என்னும் நூலின் முதல் தொகுதியில் தொன்மைப் பண்பாட்டின் ஏனைய கூறுகளை விளக்கி இரண்டாம் தொகுதி முழுவதிலும் தொன்மைச் சமயத்தைப் பற்றி எழுதும் போது ஆவியுலகக் கோட்பாடு குறித்து விளக்குகிறர். ஆவியலகக் கோட்பாட்டின் மையக் கருத்தை டைலர் குறிப்பிடும் போது சமயத்தின் தொடக்கம் ஆவிகளின்பால் ஏற்பட்ட நம்பிக்கையிலிருந்து தோன்றியது என்கிறார். டைலரின் இக்கருத்து சமயத்தைப்பற்றிய குறைந்தபட்ச வரையறை (minimum Definition Of Religion) எனச் சிறப்பித்து கூறப்படும். ஆவி வழிபாட்டிலிருந்தே (doctrine of spirits) சமயம் தோன்றியது என்று கூறும் டைலர், அக்கோட்பாட்டில் இறப்பு, கனவு ஆகியவற்றோடு தொடர்புடைய ஆன்மாக் கோட்பாடும் (Doctrine of souls) அடங்கும் எனக் கூறுகிறார் (Bhakhtavacala Bharathi, 2014).

## தொல்காப்பியத்தில் வழிபாட்டு மரபு

தமிழின் முதல் இலக்கண நூலான தொல்காப்பியத்தில் கடவுள் வழிபாட்டைப் பற்றி பொருளதிகாரத்தின் அகத்திணையியலில்,

“மாயோன் மேய காடுறை உலகமும்

சேயோன் மேய மைவரை உலகமும்

வேந்தன் மேய தீம்புனல் உலகமும்

வருணன் மேய பெருமணல் உலகமும்

முல்லை குறிஞ்சி மருதம் நெய்தல் எனச்

சொல்லிய முறையால் சொல்லவும் படுமே” (Ilampooranar, 2018)

எனும் நூற்பாவில் நீலநிற மேனியுடைய திருமால் விரும்பி உறையும் காட்டு நிலமும், சிவந்த நிற மேனியுடைய முருகன் விரும்பி உறையும் மலைப்பாங்கான நிலமும், தேவர் தலைவனான இந்திரன் விரும்பி உறையும் நீர்வளம் செறிந்த மருதநிலமும், மழைக்கடவுள் வருணன் விரும்பி உறையும் பெரிய பரப்பையுடைய மணல் சூழ்ந்த கடற்பகுதியும் என்று அவ்வவ் நிலப்பரப்பில் வழிபடும் கடவுள்களை தொல்காப்பியர் கூறியுள்ளார்.

## பாலைக்கலியில் வழிபாட்டு மரபுகள்

பாலைக்கலியில் பல்வேறு கடவுளர்களை அந்நில மக்கள் வழிபாடு செய்வதாக பாலைப்பாடிய பெருங்கடுங்கோ பலவிடங்களில் குறிப்பிட்டுச் சென்றுள்ளார். அவ்வகையில் கீழ்க்காணும் பாடல்,

"ஒருகுழை யொருவன்போ லிணர்சேர்ந்த மராஅமும்

பருதியஞ் செல்வன்போ னனையூழ்ந்த செருந்தியு

மீனேற்றுக் கொடியோன் போன் மிஞிறார்க்குங்காஞ்சியு

மேனோன்போ னிறங்கிளர்பு கஞலிய ஞாழலும்

ஆனேற்றுக் கொடியோன்போல் எதிரீயஇ லவமுமாங்கத்

தீதுதீர் சிறப்பின் ஐவர்கள் நிலைபோலப்

போதவிழ் மரத்தோடு பொருகரை கவின்பெற

நோதக வந்தன்றால் இளவேனில் மேதக" (பாலைக்கலி.26:01-08)

எனும் பாடல் வரிகளில் ஒற்றைக்குழை அணிந்த பலராமனின் நிறம்போன்ற கொத்துக்களைக் கொண்ட வெண்கடம்பும், ஞாயிற்றின் நிறம் போன்ற அரும்புகள் மலர்ந்த செருந்தியும், சுறாமீன் கொடியோனாகிய காமன் நிறம் போல, வண்டுகள் வந்து மொய்க்கும்படி மலர்ந்த காஞ்சியும் அவன் தம்பியாகிய சாமன் நிறம்போல் நெடுங்க மலர்ந்த புலிநகக் கொன்றையும், எருதுக் கொடியுடைய சிவன் போலத் தோன்றும் இலவமும் ஆகிய மலர்களை, அவ்வைம் பெரும் கடவுளர் நிற்கும் நிலைபோல மலரும் மரங்களால் ஆற்றங்கரை அழகு பெற்றுவிட்ட காட்சியை தலைவி பாடுவதாக இப்பாடல் வரிகள் கூறுகின்றன இவ்வரிகளில் பலராமன், காமன், சாமன், சிவன், சூரியன் போன்ற கடவுள்களை மரங்களுக்கு ஒப்புமைப்படுத்தி தலைவி பாடுவதாக பெருங்கடுங்கோ அமைத்துள்ளார். அந்த வகையில் இவ்வைந்து கடவுள்களையும் பாலை நில மக்கள் வழிபாடு செய்திருப்பதை இதன்மூலம் அறியலாம். மேலும்,

"தொன்னலம் நனிசாய் நம்மையோ மறந்தைக்க

ஒன்னாதார்க் கடந்தடூஉம் உரவுநீர் மாகொன்ற

வென்வேலான் குன்றின் மேல்விளையாட்டும் விரும்பார் கொல்" (Rasamaanikkanar, 2011)

என்னும் வரிகளின் மூலம் பகைவரை வஞ்சித்து அழிக்காது வென்று அழிப்பவனும், கடலிடையே நின்ற மாமரத்தை அழித்தவனுமான முருகன் கோயில் கொண்டிருக்கும் திருப்பரங்குன்றில் நிகழும் வேனில் விழா விளையாட்டைப் பற்றி தலைவி பாடுவதால் முருக வழிபாடு பாலை நில மக்கள் மேற்கொண்டிருப்பதை இதன் மூலம் அறிய முடிகிறது.

## குறிஞ்சிக் கலியில் வழிபாட்டு மரபுகள்

குறிஞ்சி நில மக்களின் வழிபாட்டு மரபுகளை கபிலர் தன் பாடல்களில் ஆங்காங்கே எடுத்துக்காட்டி சென்றுள்ளார். அவ்வகையில் கீழ்க்காணும்,

"தேனாறு கதுப்பினாய் யானுமொன் றேத்துகு

வேய்நரல் விடரகம் நீயொன்று பாடித்தை

கொடிச்சியர் கூப்பி வரைதொழு கைபோல்

எடுத்த நறவின் குலையலங் காந்தள்" (Rasamaanikkanar, 2011)

என்னும் பாடல் வரிகளில் குற மகளிர்கள் உற்றார் உறவினர்க்கு உண்டாகும் துன்பத்தை நீக்க தலைவனுக்குரிய மலையில் இருந்து முருகனை தொழுவதாக இப்பாடல் வரிகள் அமைந்துள்ளது. மேலும்,

“ஜவன வெண்ணெல் அறைஉரலுள் பெய்து இருவாம்

ஐயனை ஏத்துவாம் போல அணிபெற்ற

மைபடு சென்னிப் பயமலை நாடனைத்” (Rasamaanikkanar, 2011)

என்னும் மேற்கண்ட பாடல் வரிகளில் குறிஞ்சி நிலப் பெண்கள் மூங்கில் நெல்லை குற்றும் போது முருகனை வழிபாடு செய்யும் போதும் வாழ்த்திப்பாடுவதைப் போல தலைவனை பாடுவோம் வா என்று தோழியும் தலைவியும் உரையாடிக் கொள்வதாக அமைந்துள்ளது. அதேபோல்,

“வரிறுதல் எழில்வேழம் பூநீர்மேற் சொரிதரப்

புரிநெகிழ் தாமரை மலரங்கண் விறெய்தித்

திருநயத் திருந்தன்ன தேங்கமழ் விறல்வெற்ப” (Rasamaanikkanar, 2011)

என்னும் வரிகளில் திருமகள் பூவோடு கலந்த நீரைச் சொரிய மலர்ந்த தாமரை மலரில் தெய்வச் சிறப்போடு வீற்றிருப்பதாக அமைந்துள்ளது. மேலும்,

“மணங்கமழ் நாற்றத்த மலைநின்று பலிபெறூஉம்

அணங்கென அஞ்சுவர் சிறுகுடி யோரே” (Rasamaanikkanar, 2011)

என்னும் பாடல் வரிகளில் மலை மேல் கோயில் கொண்டிருக்கும் முருகனுக்கு குறவர்கள் பலி கொடுத்து வழிபடுவதாக அமைந்துள்ளது. அதேபோல்,

“இனியசெய் தகன்றுநீ இன்னாதாத் துறத்தலின்

புனியிவள் படரெனப் பரவாமை ஒல்லுமன்

ஊரலர் தூற்றலின் ஒளியோடி நறுநுதல்

பீரல ரணிகொண்டு பிறைவனப் பிழவாக்கால்” (Nachinarkiniyar, 2007)

என்னும், மேற்காணும் பாடல் வரிகளில் தலைவி காதலித்ததால் ஊரினர் அலர் கூறித் தூற்றுவதால் அவளின் நெற்றி ஒளி இழந்து விட்டது ஆகையால் இத்துன்பம் தெய்வத்தால் வந்தது எனக்கூறி அத்தெய்வத்தை வழிபடாதிருப்பதும் இயலும், ஆனால் அதற்கு அந்நெற்றி துணைபுரியவில்லை எனத் தெய்வ வழிபாட்டை இவ்வரிகள் உணர்த்துகின்றன.

## மருதக்கலியில் வழிபாட்டு மரபுகள்

வயலும் வயல் சார்ந்த பகுதியான மருதக் கலியில் இறை வழிபாட்டு மரபுகளை பல பாடல்களில் காணமுடிகிறது. அதனை கீழ்க்காணும்,

“மையற விளங்கிய மணிமருள் அவ்வாய்தன்

மெய்பெறா மழலையின் விளங்குபூண் நனைத்தரப்

பொலம்பிறை யுட்டாழந்த புனைவிளை யுருள்கலன்

நலம்பெறு கமழ்சென்னி நகையொடு துயல்வர

உருவெஞ்சா திடைகாட்டுச் உடைகழ லுந்துகில்

அரிபொலி கிண்கிணி யார்ப்போவா அடிதட்பப்

பாலோ டலர்ந்த முலைமறந்து முற்றுத்துக்

கால்வல் தேர் கையன் இயக்கி நடைபயிற்றா

ஆலமர் செல்வன் அணிசால் பெறுவிறல்" (Nachinarkiniyar, 2007)

என்னும் பாடல் வரிகளில் மருத நிலத்தில் வாழும் ஒரு பெண் தன்னுடைய மகளை முருகனுக்கு ஒப்பாக பவழமணி போன்ற அழகு வாய்ந்த தலையில் பிறை வடிவில் செய்யப்பட்ட அணியிலிருந்து தொங்கும் சுட்டி என்னும் அணி, முத்துவடங்களோடு அசைய, அழகிய கிண்கிணியின் ஒலிக்கு மாறாமல் அடி எடுத்து வைக்கும் கால்கள், நடைதேர் உருட்டி நடை பயின்று, ஆலமர் கடவுள் மகனாகிய முருகன் போல் வருவதாகப் பாடல் அமைந்து சிவனையும், முருகனையும் எடுத்துக்காட்டி செல்கின்றது. அதேபோல்,

"உயர்சீர்த்தி

ஆல்அமர் செல்வன் அணிசால்மகன் விழாக்

கால்கோள் என்று ஊக்கித், ததும் என நோக்கித்" (Nachinarkiniyar, 2007)

என்னும் பாடல் வரிகளில் மருதநில மகளிர் ஆலின்கீழ் வீற்றிருக்கும் சிவபெருமானின் செல்வச் சிறுவன் முருகன் திருவிழாத் தொடங்கி விட்டதோ எனக்கருதி விரைந்து வீட்டை விட்டு வெளியே வந்து பார்த்தனை இவ்வரிகள் கூறுகின்றன. முருக வழிபாட்டை உணர்த்துவதாக இப்பாடல் வரிகள் அமைந்துள்ளன. மேலும்,

"வண்டூது சாந்தம் வருக்கொள நீவிய

தணடாத்தீஞ் சாயற் பரத்தை வியன்மார்ப

நெட்டிருங் கூந்தற் கடவுள ரெல்லார்க்கும்

முட்டுப்பா டாகலு முண்டு" (Nachinarkiniyar, 2007)

எனனும் பாடல் முழுவதும் பரத்தை வீடு சென்ற கணவன் வரக்கண்டு மனைவி சினங்கொள்ள அப்போது கணவன் நான் உயர்ந்த வாழ்க்கையை வாழ கடவுளை வழிபட்ட செய்திகளும், திருப்பரங்குன்றத்தில் வந்து நின்ற சூரனைக் கொன்ற முருகனைப் பற்றியும், பூப்பலியை இட்டு அதனை ஏற்றுக் கொண்ட கடவுள் போன்ற வழிபாட்டுச் செய்திகளை இப்பாடலில் காணமுடிகிறது.

காமன் ஆரியக் கடவுள், அவன் ஏனைய தொகை நூல்களுள், 'காமன்' எனவும் 'சாமனார்க்கு மூத்தகாமானார்' எனவும் மருதக் கலியுள் (செ.29) கூறப்பட்டாற் போலக் கூறப்பட்டிலன். காமனைப் பற்றிய இச்செய்திகள் பிற்காலச் சமண, பௌத்த காவியங்களிலும் ஆண்டாள் பாசுரத்திலும் பெருங்கதையிலும் காணப்படுகின்றன. கி.பி. 6 - ஆம் நூற்றாண்டிற்கு பிற்பட்ட சிந்தாமணியில் காமன் கோட்டம் கூறப்படுகிறது. கி.பி. 7 - ஆம் நூற்றாண்டினதெனக் கருதப்படும் களவியல் உரையில் 'அடுசிலையொடு கணை ஏந்தி வடிவு கொண்ட காமன் போலச் சென்று' என வருதல் காண்க. எனவே 'காமன்' என்னும் கடவுளும் 'அவன் சாமனார் தமையன்' என்னும் செய்தியும் கி.பி. 2 - ஆம் நூற்றாண்டிற்கு முற்பட்ட கடைச்சங்க காலத்துப் பழம் பாடல்கட்குப் பிற்பட்டனவே எனல் தவறாகாது. (Rasamaanikkanar, 2011)

## முல்லைக்கலியில் வழிபாட்டு மரபுகள்

முல்லைத் திணைப் பாடிய சோழன் நல்லுருத்திரன் அவர்கள் முல்லை நில மக்களின் வழிபாட்டு மரபுகளை தன் பாடல்களில் ஆங்காங்கே குறிப்பிட்டுச் சென்றுள்ளார். அவ்வகையில் கீழ்க்காணும்,

"நறையொடு துகளெழ நல்லவ ரணிநிற்பத்

துறையு மாலமுந் தொல்வலி மராஅமும்

முறையுளி பராஅய்ப் பாய்ந்தனர் தொழூஉ" (Nachinarkiniyar, 2007)

என்னும் பாடல் வரிகளில் கொல்லேற்று விழாவில் கலந்துக்கொள்ளும் ஆயர்குல இளைஞர்கள் தண்ணீர்த் துறையிலும், ஆலமரத்தின் கீழும், மராமரத்தடியிலும் கோயில் கொண்டிருக்கும் கடவுளை வணங்கி விழாத் தொழுவினுள் புகுந்ததாக இவ்வரிகள் உணர்த்துகின்றன. மேலும்,

"ஏறுதங் கோலஞ்செய் மருப்பினால் தோண்டிய வரிக்கும்

ஞாலக்கொண் டெழூஉம் பருந்தின் வாய்வழீஇ

ஆலும் கடம்பும் அணிமார் விலங்கிட்ட

மாலைபோல் தூங்குந் சினை" (Nachinarkiniyar, 2007)

என்னும் பாடல் வரிகளில் எருதுகள் தம் கொம்புகளால் குத்திச் சரித்த குடர்களை கவ்வி எழுந்த பருந்தின் வாயிலிருந்து வழுக்கிய அக்குடர்கள் ஆலமரக்கிளைகளிலும், கடம்பு மரக்கிளைகளிலும், வீழ்ந்து தொங்கி, அம்மரங்களின் கீழ் கோயில் கொண்டிருக்கும் கடவுள்களை வழிபடுவதற்காகச் சூட்டிய மாலைகளை போல காட்சி அளிப்பதாக நல்லுந்துவனார் பாடியுள்ளார். அதே போல முல்லை நில மக்களின் குலதெய்வம் திருமால் வழிபாட்டை,

"கண்ணி தந்திட்டது எனக்கேட்டுத் திண்ணிதாத்

தெய்வமால் காட்டிற்று இவட்கு, என நின்னை" (Nachinarkiniyar, 2007)

என்னும் பாடல் வரிகளில் ஆயர்குல அழகி ஒருத்தி அக்குல இளைஞன் மீது காதல் கொண்டதால் அக்காதலை பெற்றோர் ஏற்றுக்கொள்வாரோ? என்ற ஐயம் எழுந்ததால் உடனடியாக குலதெய்வமாகிய திருமால் இவளுக்கு வழிகாட்டிற்று என்று கருதி பெற்றோர்கள் திருமணத்திற்கு முடிவு செய்ததனை, தோழி கூறுவதாக இப்பாடல் வரிகள் உணர்த்துகின்றன. மேலும்,

"திருமணல் தாழப்பெய் தில்பபூவ லூட்டி

எருமைப் பெடையோ டெமரீங் கயரும்

பெருமண மெல்லாந் தனித்தே யொழிய

வரிமணன் முன்னுறைச் சிற்றில் புனைந்த" (Nachinarkiniyar, 2007)

என்னும் பாடல் வரிகளில் முல்லை நில மக்களின் திருமண முறைகளான புதுமணல் பரப்புதலும், மனைக்குச் செம்மண் பூசுதலும், பெண் எருமைக்கோடு நட்டுக் கடவுளை வழிபட்டும் முல்லை நில மக்கள் திருமண முறைகளை மேற்கொண்டதை இவ்வரிகள் தெரிவிக்கின்றன.

## நெய்தறக்கலியில் வழிபாட்டு மரபுகள்

கடலும் கடல் சார்ந்த பகுதியில் வாழும் மக்களான பரதவர்கள் இறை வழிபாட்டில் ஈடுபட்டிருந்ததனை நல்லுந்துவனார் பாடல்களில் அறியமுடிகிறது. அதனை கீழ்க்காணும்,

"ஒருங்குடன் இம்மென இமிர்தலிற் பாடலோ

டரும்பொருள் மரபின்மால் யாழ்கேளாக் கிடத்தாற்போல்

பெருங்கடல் துயில் கொள்ளும் வண்டிமிர் நறுங்கானல்" (Nachinarkiniyar, 2007)

என்னும் பாடல் வரிகளில் திருமால் பெறுதற்கு அரிய பொருளாகவும், பாட்டையும் யாழையும் கேட்டவாறே, பள்ளிகொண்டிருப்பது போல் இருப்பதாக இவ்வரிகள் உணர்த்துகின்றன. மேலும்,கடலினை தெய்வமாக நினைத்து சூள் உரைக்கும் செய்தியை,

"பெருங்கடல் தெய்வநீர் நோக்கித் தெளத்தேன்

திருந்திழை மென்றோள் மணந்தவன் செய்த" (Nachinarkiniyar, 2007)

என்னும் பாடல் வரிகளில் தலைவியை தலைவன் கடலினை தெய்வமாக நினைத்து வழிபட்டு உண்னைப் பிரியேன் என சூளுரைத்ததாக குறிப்பிடுகிறது. அதே போல,

“வழிபட்ட தெய்வந்தான் வலியெனச் சார்ந்தார்கண்

கழியுநோய் கைம்மிக அணங்காகி யதுபோலப்” (Nachinarkiniyar, 2007)

என்னும் பாடல் வரிகளில் தம்மைக் காக்கும் அரணாம் என்று கருதி அடைந்த கடவுளே அடைந்த அன்பர்களை. கொடுநோயில் தள்ளிக் கொடுமை செய்ததாக இப்பாடல் வரிகள் குறிப்பிடுகின்றன. அதே போன்று தட்சணாமூர்த்தி கடவுளின் காட்சியை,

“மாமலர் முண்டகந் தில்லையோ டொருங்குடன்

கான லனிந்த உயர்மணல் எக்கர்மேல்

சீர்மிகு சிறப்பினோன் மரமுதல் கைசேர்த்த

நீர்மலி கரகம் போல் பழந்தூங்கு முடத்தாழைப்

பூமலர்ந் தவைப்போலப் புள்ளளல்குந் துறைவகேள்” (Nachinarkiniyar, 2007)

என்னும் பாடல் வரிகளின் மூலம் கரிய மலர்களுடைய கழிமுள்ளி தில்லைமரத்தோடு ஒன்று கலந்து காட்சி அளிக்கும் கடற்கரையில் உயர்ந்த மணல் மேட்டில், கல்லால் மரத்தில் கட்டித் தொங்கவிட்ட கமண்டலங்கள் போல காட்சி அளிக்கும் மரத்தின் கீழ் தட்சணாமூர்த்தி இருப்பதாக இப்பாடல் வரிகள் உணர்த்துவதை அறியமுடிகிறது.

## முடிவுரை

உலகில் உள்ள ஒவ்வொரு மனித இனங்களுமே தங்களுக்கான ஓர் இறை வழிபாட்டை மேற்கொண்டிருக்கிறார்கள். அது அவரவர்களின் இறை பக்தியும், நம்பிக்கையும் ஆகும். அவ்விதத்தில் தமிழர்களும் பழங்காலந்தொட்டு இறை வழிபாட்டில் தங்களுக்கான மெய்யியல் கோட்பாட்டில் மிகுந்த ஈடுபாடு காட்டியுள்ளனர். அவற்றிற்கு முன்னுதாரணமாக விளங்குவது தான் பழந்தமிழ் இலக்கியமான சங்க இலக்கியங்கள் அச்சங்க இலக்கியத்தில் உள்ள கலித்தொகையில் காணப்படும் வழிபாட்டு மரபுகளை விளக்குவதாக இவ்வாய்வுக் கட்டுரை அமைகிறது.

## References

Bhakhtavacala Bharathi, (2014) Panpaattu Maanidaviyal, Manivaasagar Publication, Chennai, India

Ilampooranar, (2018) Tholkappiyam Poorulathikaram, Saratha Publication, Chennai, India

Nachinarkiniyar, (2007) Kaliththogai, Kalaga Veeliyidu, Chennai, India

Rasamaanikkanar, M. (2011) Kaliththogai, Poombukar Publication, Chennai, India

Sakthivel, S. (2014) Nattuppuraviyal Or Aayvu, Manivasakar Publication, Chennai, India

Thirunenasambanthar, S. (2019) Nannool, Kathir Publication, Chennai, India

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License